SC No. 3/2018

29.11.2022.

அ.சா.1 பால்துரை

**<u>அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது மாமனார் கொத்தனார் வேலை செய்கிறார். 2-ம் எதிரி என்னுடன் ெஹல்பராக சம்பவத்திறகு முன்பு வரை வேலை செய்தார், தற்போது என்னவேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. 4-ம் எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. 3-ம் எதிரி கனகராஜ் கர்ன்ல் எஸ்டேட்டில் வேலை பார்த்தார் அவர் அந்த எஸ்டேட்டிலேயே குடியிருந்தார். 3 மற்றும 4 எதிரிகள் மேற்படி எஸ்டேட்டில்தான் குடியிருக்கிறார்கள். எனக்கும் எனது மாமனரான 1-ம் எதிரிக்கும் 1 மாத காலமாக தகராறு இருத்நது என்ற நிலையில் போலிசில் நான் எந்தபுகாரும் கொடுக்கவில்லை. அதேபோல் ஊர் பஞ்சாயத்தையும் ஏற்படுத்தவில்லை. முதலில் 1 மற்றும் 2 எதிரிகள் என்னை அடித்தனர், என் மனைவி சத்தம்போட்டவுடன், 3 மற்றும் 4 எதிரிகள் பின்னர் என்னை அடித்தனர். என் மாமனார் இரண்டு கைகளாலும் கோடாரியை வைத்து வெட்டினார். முதலில் மாமனாரும், மைத்துனரும் அடித்தார்கள் என்றும் பின்னிட்டு வழக்கில் கண்ட 3 மற்றும் 4 எதிரிகள் என்னை அடித்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லி உள்னேன். என் மாமனார் கோடாரியால் வெட்டியபோது தலை மற்றும் வலது கைதோள்பட்டையில் அடிப்பட்டதை மருத்துவரிடம் சொன்னேன். எனது மாமனார் அவருடைய மகனான 2-ம் எதிரியிடம் இருந்து கத்தியை பிடுங்கி என்னை வெட்டினார் என்ற சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை, மைத்துனர் வெட்டியதை சொன்னேன், ஆனால் மாமனார் என்னை வெட்டினார். 1-ம் எதிரி தலையில் வெட்டினார். சாபொ2 கத்தியால்தான் என் மாமனார் என் தலையில் வெட்டினார் நான் தடுத்தேன், தடுக்கவில்லை என்றால் இறந்திருப்பேன். போலிசார்

விசாரணையில் என் மாமனார் என்னை கத்தியால் வெட்டும்போது தடுத்ததை சொல்லவில்லை. 1-ம் எதிரி என்னை வெட்டவரும்போது நான் தடுத்தேன், அவரை நான் அடிக்கவேண்டும் என்று தோன்றவில்லை காரணம் அவர் எனக்கு மாமனார் மற்றும் வயதில் மூத்தவர்.

அதேமாதிரி 1-ம் எதிரி கோடாரியால் என் மனைவியை தலையில் மோதினார். ரத்தக்காயம் வரவிலலை. வீக்ககாயம் வந்தது, வீட்டில் நாட்டு மருத்துவம் மனைவிக்கு பார்த்தோம். என் மனைவிக்கு தலையில் அடிபட்ட விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. என் மனைவிக்கு அவ்வாறு அடிபடவில்லை என்றும் அவ்வாறு அடிபட்டிருந்தால் அந்த விசயத்தை போலிசார் விசாரணையில் சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. வலது கை தோள்பட்டையில் அடிபட்டது வெட்டுக்காயமாகும். மேற்படி வெட்டுகாயத்திற்கு தையல் போடவில்லை மருந்து போட்டார்கள் அங்கு வீக்கம் இருந்தது. 2-ம் எதிரி கத்தியால் எனது தலையில் வெட்டினார், என் மாமனார் வெட்டிய அதே இடத்தில் 2-ம் எதிரி வெட்டினார் அதனால் காயம் பெரிதாகியது. 2-ம் எதிரி கத்தியால் என்னை வெட்டவில்லை என்றும் என்னை எந்தவிதத்திலும் தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாபொ1 மற்றும் சாபொ2 பொருட்களில் ரத்தக்காயம் எதுவும் இல்லை என்றும் எனவே அந்த ஆயுதத்தால் 1 மற்றும 2 எதிரிகள் என்னை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4-ம் எதிரி நாகராஜ் எந்த திசையில் வந்து அடித்தார் என்று தெரியாத நிலையில் மற்ற எதிரிகள் என்னை தாக்கியதால் எனக்கு தலையில் அடிபட்டது, நான் கீழே விழுந்து விட்டேன். 4-ம் எதிரி என் பின்னால் வந்து என் முதுகில் இரும்பு ராடால் அடித்தார். அடிப்பட்டு கீழே விழுந்த நிலையில் 4-ம் எதிரி பின்னிருந்து அடித்தார் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை அவர் அந்த மாதிரி கேட்கவில்லை. 3 மற்றும் 4 எதிரிகள் மேலே சொல்லப்பட்ட கர்ன்ல் எஸ்டேட்டில் குடியிருப்பதால் அவர்களுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பு

இல்லை என்றால் சரியல்ல. 1-ம் எதிரி வீட்டை தாண்டியவுடன் கர்னல் எஸ்டேட் பீல்டு ஆபிசர் குவார்டர்ஸ், அதை தொடர்ந்து லேபர் ஆபிஸ் குவார்டர்சும் உள்ளது. 3-ம் எதிரியின் வீடு 1-ம் எதிரியின் வீட்டுடன் ஒட்டியது போல் இல்லை சற்று தள்ளி உள்ளது 20, 30 அடி தூரம் வரும். வழக்கில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எந்த எதிரியும் என்னை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரொம்ப மயக்கம் இல்லை. நிலைதடுமாறி விழுந்தேன்.

போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார், எனக்கு வாந்தி வந்ததால் மருத்துவர் அதிகம் பேச வேண்டாம் என்று சொன்னார், எனவே அனைத்து விசயங்களையும் போலிசிடம் என்னால் சொல்ல இயலவில்லை. 108 ஆம்புலன்ஸை எனது நண்பர் போனில் அழைத்தார், என் நண்பருக்கு எனது மனைவி போன் செய்து சம்பவ இடத்திற்கு அழைத்தார், அதன் பின்னர் என் நண்பர் ஆம்புலன்சுக்கு போன் செய்தார். எந்த ஒரு ஆம்புலன்சும் வரவில்லை என்றும் நானே மருத்துவமனைக்கு வலுக்கட்டாயமாக வந்து சேர்ந்தேன் என்றால் சரியல்ல. மருத்துவ மனைக்கு காலை 7 மணிக்கு சென்றேன், மருத்துவர் எனக்கு கட்டு போட்டிருந்தபோது போலிசார் சுமார் 8 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தனர். மருத்துவமனைக்கு ஆம்புலன்சுடன் என் நண்பர் வந்தனர், அங்கிருந்து அவர்கள் எண் அண்ணனுக்கு போன் செய்தார்கள் அண்ணன் பின் வந்தார். என் மனைவி உடன் வரவிலலை, அவர் 3 குழந்தைகளை பார்த்து கொண்டார். என் மனைவி சம்பவ நடந்த நான் கட்டிய செட்டிலேயே இருந்தார். போலிசாரிடம் என் மனைவி நான் மருத்துவமனைக்கு சென்ற பின்னர் சம்பவ இடத்தில் செட்டில் இருந்ததாக நான் சொல்லவிலலை போலிசார் அவ்வாறு கேட்கவிலலை. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தை போலிசார் மருத்துவமனையில் எழுதினார்கள். படித்து பார்த்து கையொப்பம் போடவில்லை, மயக்க நிலையில் இருந்தேன், கையொப்பம்போட்டேன். என் மாமானாரிடம் முன்

அனுமதி பெற்று செட் போடுவதற்கான வெல்ட் வைப்பதற்கு மின்சார துறையிடம் அனுமதி பெற்ற விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை, என் மனைவி சொன்னார். ஊட்டி மருத்துவமனையில் இருந்து கோவை மருத்துவமனைக்கு நானாக கேட்டுக்கொண்டதன் பேரில் அனுப்பினார்கள் என்றால் சரியல்ல, எனக்கு வாந்தி மற்றும் மயக்கம் அதிகமாக வந்ததால் மருத்துவர்களே மேற்கொண்டு மருத்தவர் பார்க்க கோவை மருத்தவமனைக்கு அனுப்பினார்கள். எனக்கு எந்தஒரு காயமும் படவிலலை என்றும் எனது வலுக்கட்டாயத்தின் பேரில் போலிசார் என்னை கோவை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. எனக்கு என் மாமனார் சொத்து கொடுக்காததால்தான் அவரின் மேல் எனக்கு காழ்புணர்ச்சி இருந்தநிலையில் இப்படி ஒரு வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல.

மாமனாரின் சொத்தை அபகரிக்கும் வேண்டும் என்றுதான் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் சொன்னதுபோல் என்னை தாக்கவில்லை என்றும் அவ்வாறு தாக்கியிருந்தால் எனக்கு கொடுங்காயம் ஏற்பட்டிருககும் என்றால் சரியல்ல. சம்மந்தமே இல்லாமல் எதிரிகளின் மேல் பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிய்லல. நான் சொன்னதுபோல் எதிரியின் வீட்டு பக்கத்து செட்டில் நான் தஙகவில்லை என்றும் அது தஙகுவதற்கு ஏற்ற இடம் இல்லை என்றால் சரியல்ல. அந்த செட்டை எனது மாமனார் மற்றும் மைத்துனர் அமைத்தார்கள் என்றால் சரியல்ல.

## மறுவிசாரணை

மயக்கநிலையில் நான் மருத்துவமனையில் இருந்தபோது நான் சொன்ன சங்கதியைத்தான் போலிசார் புகார்வாக்குமூலமாக எழுதினார்கள்.

**அனுமதியுடன் மறு குறுக்கு விசாரணை**

நான் மயக்கநிலையில் இருந்ததால் போலிசார் எழுதி கொண்ட புகார் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் போட்டேன் என்றும் மருத்துவர்கள் என்னை அதிகம் பேசவேண்டாம் என்று சொன்னதால் புகார் வாக்கு மூலத்தை நான் கொடுக்கவில்லை என்றும் போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/. Dr. P. Murugan,
District Judge, Udhagamandalam

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 3 of 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW.2 (L.W- 2)** |
| **Name** | **:** | **திரு. தமிழ்செல்வி** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>29.11.2022</u>**

**முதல் விசாரணை**

நான் மேலே கண்ட முகவரியில் வசிக்கிறேன். அசா1 எனது கணவர், தற்போது நான் கொரியர் கம்பெனியில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும், 1-ம் எதிரி எனது தந்தை, 2-ம் எதிரி எனது தம்பி, 4-ம் எதிரி என் அப்பாவின் பக்கத்து வீட்டுக்காரர், 3-ம் எதிரி கனகராஜ் இறந்துவிட்டார் என்பதை தெரிந்து கொண்டேன், அவர் என் தந்தை வீட்டுக்கு பக்கத்தில் குடியிருந்தார், 3 மற்றும் 4 எதிரிகள் அப்பா மகன் ஆவர். அன்பு அண்ணா காலனியில் நானும், எனது கணவரும் எனது 3 ஆண்குழந்தைகளும் வசிக்கிறோம், என் தகப்பானர் 1-ம் எதிரி அவருக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு இடத்தில் 1 கீமீ தூரத்தில் என்னை வீடு கட்டி வாழும்படி சொன்னார். அதற்கு செங்கல், ஜல்லி,. இரும்புகம்பி போன்றவற்றை வாங்கி கொண்டு அங்கு இருந்து கொள்ளும் படி சொன்னார். தரைதளத்தில் என் தந்தை ஏற்கனவே இருந்தார்,

மேல்தளத்தில் என்னை வீடு கட்ட சொன்னார். அதற்கு என்னால் முடியாது என்றும் பக்கத்தில் உள்ள காலி இடத்தில் செட்டு அடித்து கொள்கிறேன் என்றும் பட்டா கிடைத்தவுடன் கான்கிரிட் வீடு கட்டி கொள்கிறேன் என்று சொன்னேன். செட்போட சிறிது இடம் கொடுத்தார், அதில் நாங்கள் செட் போட்டோம். அதற்கு என் தந்தை எதற்கு செட்டு போட்டாய் கான்கிரீட் வீடுதானே கட்ட சொன்னேன் என்று 03.10.2017 அன்று காலை 6 மணிக்கு சண்டை போட்டார்.

(முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

Sd/. Dr. P. Murugan,
District Judge, Udhagamandalam